வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘வைரவநாதன் கோவிலின் வரலாறும் வழிபாடும்

**மு.முத்துச்செல்வி,**
முதுகலைத்தமிழ் இரண்டாமாண்டு,
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி.
mmuthuselvi71@gmail.com
6374177032

முன்னுரை

ஒரு நாட்டின் கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை விளக்குவதற்கு அந்நாட்டுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளே ஆதாரமாய் விளங்குகின்றன. அந்நம்பிக்கைகளின் அடிப்படையில் தோன்றியதே வழிபாடு ஆகும். தமிழகம் முழுவதும் திருக்கோவில்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவை மக்களின் வழிபாட்டிற்கு மட்டுமின்றி கலைப்பெருக்கத்திற்கும் உறுதுணைபுரிந்தன. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை முதலான கலைகள் ஆலயங்களின் மூலம் வளர்ச்சிபெற்றன. இவை மட்டுமின்றி இசைமற்றும் நாட்டியக் கலைகளைவளர்க்கும் விதமாகவும் கோவில்கள் விளங்குகின்றன. மொத்தத்தில் கலைகளின் கருவூலமாகத் திருக்கோவில்கள் திகழ்கின்றன. இத்தகையத் தன்மையுடைய கோவில்களை ஆய்வுசெய்வது மிகவும் இன்றியமையாததாகும். அவ்வகையில் வைரவநாதன் கோவிலினை ஆய்வுசெய்யும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

கோவிலின் அமைவிடம்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு சாலையில் 10 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள ஊர் செங்குன்றாபுரம். இந்த ஊரின் எல்லைப் பகுதியிலும் அங்கிருக்கு; கண்மாய்க்கு அருகிலும் வைரவநாதன் கோவில் அமைந்துள்ளது. விவசாய நிலத்திற்கு மத்தியில் மிக அழகுடன் இக்கோயில் அமைந்துள்ளது.

பெயர்க் காரணம்

வலையர் இன மக்கள் சீலைக்காரியைத் தங்களின் குலதெய்வமாக வணங்கி வந்தனர். ஆங்கிலேயரின் தொல்லைகள் தாங்காமல் தன் குலதெய்வமான சீலைக்காரியை வைரவன் என்ற யாதவர் இனத்தைச் சேர்ந்தவரிடம் ஒப்படைத்துவிட்டு தலைமறைவாகினர். ஆங்கிலேயர்கள் வலையர்களைத் தேடி இறுதியாக வைரவன் இருக்கும் இடத்திற்குச் சென்றனர். அங்கிருந்த அனைவரையும் வலையர்கள் இருக்கும் இடத்தைக் கேட்டுக் கொடுமைப்படுத்தினர். அவர்கள் பாதுகாத்து வைத்திருந்த சீலைக்காரி அம்மனை சேதப்படுத்தினர். அதனைத் தடுக்க எண்ணி சண்டையிட்ட வைரவனும் அவனுடைய உறவினர்களும் உயிர்விட்டனர். சிலகாலம் கழித்து ஆங்கிலேயருக்குப் பயந்து ஒளிந்து இருந்த வலையர்இன மக்கள் வைரவன் இருக்கும் இடத்தைத் தேடிவந்தனர். வைரவனின் உயிர்விட்டகாரணத்தைஅறிந்தஅவர்கள் மிகுந்த மனவருத்தம் அடைந்தனர். வைரவனை முதல் தெய்வமாக வணங்கி பின்னர் சேதம் அடைந்திருந்த சீலைக்காரியை வணங்கினர். அன்று முதல் அவர்களுக்கு வைரவனே காவல்தெய்வமாக மாறிவிட்டார்.

குலதெய்வம்

“இனம் என்பது தம்மோடு சேர்ந்த கூட்டத்தினைக் குறிக்கும்”1. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சூழல், இடம் மற்றும் நாகரீகத்திற்கு ஏற்றவாறு தன்னுடைய கூட்டத்துடன் வாழ முயற்சி செய்கிறான். இந்நிலையை இனக்குழுச்சமுதாயம் என்று கூறுவர். இந்த இனத்தின் உட்பிரிவாகக் குலத்தைக் குறிப்பிடலாம். ஒரு குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து அக்குடும்பங்கள் எல்லாம் ஒரே உறவு முறையாகும் பொழுது அது குலம் என்றாகிறது. அதாவது பல பங்காளிகளின் உறவுமுறையைக் குலம் என்று அழைக்கின்றனர். இந்தக் குலத்தினர் தங்கள் குடும்பத்தின் முன்னோர்களையோ குடும்பத்திற்காக உயிர் விட்டவர்களையோ அல்லது இன்னும் எண்ணற்றக் காரணங்களால் தன் குலத்தைச் சார்ந்தவர்களைத் தெய்வமாக வழிபட்டனர். அவ்வகையில் வைரவநாதன் குலதெய்வமாக வழிபடப்பட்டார்.

வைரவநாதன் தன் இனத்தைக் காத்துக் கொள்வார் என்ற நம்பிக்கையில் மாசிமாதம் திருவிழாவும் மகாசிவராத்திரி ஆரம்பித்து ஒன்பது நாட்கள் வரை கிடாவெட்டி ஊர் மக்களுக்கு அன்னதானமும் நடைபெறுகின்றது. இந்தக் கோவில் ஆயிரம் பேருக்குக் குலதெய்வமாக இருந்து வருகின்றது.

கோவிலின் அமைப்பு

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்"2 என்பார் உலகநாதர். கோ + இல் = கோயில். கோ என்ற சொல்லிற்கு அரசன், தெய்வம், இறை என்று பொருள். இளங்கோவடிகள் "கோயில் சிலம்பு கொண்ட கள்வன்"3 என்ற அடியில் கோயில் என்ற சொல்லை அரண்மனை என்னும் பொருளில் பயன்படுத்துகின்றார். மேலும் "நுதல் வழி நாட்டத்து இறையோன் கோயிலும்"4 என்ற அடியில் கோயில் என்ற சொல் இறைவன் குடிகொண்டுள்ள இடம் என்று பொருள்படுகின்றது.

வைரவநாதன் கோயிலுக்கு ஒற்றை நுழைவாயில் அமைத்துள்ளனர். கோயில் முழுவதும் பெரிய சுவர் அமைப்பு காணப்படுகின்றது. கோயிலின் மதில் சுவரை ஒட்டியே இடதுபுறம் நீர் நிரம்பிய கண்மாய் இடம் பெறுகின்றது. கோயிலுக்கு கோபுரம் இல்லாமல் சாதாரண வேலைப்பாடுகளுடன் கற்களாலான நுழைவுவாயிலை அமைத்துள்ளனர். இவ்வைரவநாதன் கோவில்,

- கருவறை
- அர்த்தமண்டபம்
- முன் மண்டபம்
- திருச்சுற்று

ஆகிய அமைப்புகளைக் கொண்டுள்ளது.

கருவறை

கருவறை என்பது கோயிலுக்குரிய தொன்மையான கடவுளின் உருவச்சிலை அமைந்துள்ள இடமாகும். மூலவராகிய இறைவன் எழுந்தருளி இருக்கும் இடமேகருவறை ஆகும்.

அவ்வகையில் வைரவநாதன் மூலவராகக் கிழக்குத் திசைநோக்கி நின்ற நிலையில் காட்சியளிக்கின்றார்.

பரிவாரத்தெய்வங்கள்

வைரவநாதன் கோயிலின் அர்த்தம் மண்டபத்தில் இடப்பக்கம் விநாயகர் மற்றும் வலப்பக்கம் முருகனின் புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. மேலும் அர்த்தமண்டபத்தின் வெளிப்புறத்தில் சிவபெருமான் மற்றும் பார்வதியின் புடைப்புச் சிற்பங்களும் இடப்புறம் நவகிரகங்களும் கருவறையின் முன் பகுதியில் நந்தியின் உருவச் சிலைகளும் காணப்படுகின்றன. கோயிலின் நுழைவுவாயிலில் கருப்பசாமியின் சிலைஒன்றும் காணப்படுகின்றது. கோயிலின் கருவறைக்கு முன்பகுதியில் முத்தையா, பேச்சியம்மன், ராக்காச்சி அம்மன் சிலைகளும் கருவறைக்கு அருகில் சீலைக்காரியின் சிலையும் காணப்படுகின்றது. அக்கருவறைக்கு அருகில் ஆங்கிலேயர்கள் காலத்தில் கட்டப்பட்ட கிணறு ஒன்றும் காணப்படுகின்றது. அக்கிணற்றுக்கருகில் நீர்நிரம்பிய நிலையிலும் அதன் அருகில் கோவிலின் பாதி தூண்கல்லும் உள்ளது.

இக்கோவிலில் வைரவன், கருப்பசாமி, மீனாட்சி, முத்தையா ஆகிய நான்கு தெய்வங்கள் மட்டுமே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. மீனாட்சியும் யாதவர் இனத்தைச் சேர்ந்த பருவம் அடைந்த பெண் அவர். முத்தையா நாயக்கர்இனக்குழுத் தலைவனாகக் கருதப்படுகின்றார்.

வரலாறு

வைரவநாதன் கோவில் முதலில் சீலைக்காரியம்மன் கோவிலாக இருந்தது. வலையர் இனக்குழுமக்கள் குலதெய்வமாக அவளை வணங்கி வந்தனர். ஆங்கிலேயர்கள் ஆட்சிபுரிந்த காலகட்டத்தில் மக்கள் அனைவரும் அவர்களுக்கு அடிமைகளாக இருந்தனர். ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தைக் கண்ட பல கிராமமக்கள் அவர்களை எதிர்க்கத் துணிவு இன்றி பயந்து வாழ்க்கை நடத்தினர். கோவிலை புனிதமான இடமாகக் கருதுவதால் அக்காலத்தில் பெண்கள் பெரும்பாலும் கோவில்களுக்குச் செல்வதை வழக்கமாக

வைத்திருந்தனர். ஆங்கிலேயர்களின் கட்டுப்பாட்டில் கோவில்கள் இருந்தமையால் அவர்களை மீறித் தெய்வவழிபாடு செய்வது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. குலதெய்வ வழிபாட்டில் செவி வழியாக கதை ஒன்று கூறப்படுகிறது.

ஆங்கிலேயருள் ஒருவர் வலையர்குல பெண் ஒருவர் மீது ஒருதலையாகக் காதல் கொண்டார். எனவே அப்பெண்ணைத் திருமணம் செய்வதற்காகப் பெண் கேட்டு சென்றனர். பெண்ணை கொடுக்குமாறு பணிவுடன் கேட்காமல் கொடுத்தே ஆக வேண்டும் என்று வற்புறுத்தினர். குறிப்பிட்ட நாளில் திருமண ஏற்பாடுகள் செய்யும்படி ஆணையிட்டு அவ்விடம் விட்டு நீங்கினர் ஆங்கிலேயர்கள். பெண் வீட்டாருக்கு இத்திருமணத்தில் உடன்பாடு இல்லாததால் ஊரை விட்டுச் செல்ல முடிவு செய்தனர். தான் இல்லை என்றாலும் தன்னுடைய இன மக்களை ஆங்கிலேயர்கள் கொடுமைப்படுத்துவர் என்று எண்ணிய பெண் வீட்டார் தன் இனக்குழு மக்களோடு அவ்வூர் விட்டு வேறு ஊர் சென்றனர். இரவு நேரத்தில் யாரும் நெருங்க முடியாத தூரத்தில் ஆற்றைக் கடந்து குடிபெயர்ந்ததாகவும் தன் இனக்குழு மக்களோடு சென்று வேறு இடம் சென்று தலைமறைவு ஆகியதாகவும் அவ்வூரில் தற்சமயம் வாழும் மக்கள் கூறுகின்றனர். அச்சமயம் தாங்கள் வழிபட்டு வந்த சீலைக்காரியை வைரவன் என்ற யாதவர் குலத்தைச் சேர்ந்த ஒருவரிடம் ஒப்படைத்துச் சென்றுள்ளனர். இதனை அறிந்த ஆங்கிலேயர்கள் வலையர் குல மக்களைத் தேடி அலைந்தனர். எங்கு தேடியும் இம்மக்கள் கிடைக்காததால் அவர்களின் குலதெய்வமான சீலைக்காரியை அழிக்க முடிவு செய்தனர்.

அவர்களின் செயலைத் தடுத்த வைரவன் என்ற யாதவர்குலத் தலைவனை கோபத்தின் காரணமாக கொலை செய்து விடுகின்றனர். வைரவனின் சகோதரர் கருப்பசாமியும் சண்டையில் கொல்லப்பட்டார். இருப்பினும், யாதவர் இனக்குழு மக்கள் வைரவனின் மரணத்திற்குப் பிறகும் ஆங்கிலேயர்களை எதிர்த்து சண்டையிட்டனர். முத்தையா, மீனாட்சி உள்ளிட்டோரும் சண்டையில் உயிர்விட்டனர். ஆங்கிலேயர்களின் ஆட்சி நிறைவடைந்ததும் தலைமறைவாகி இருந்த வலையர் இனக்குழு மக்கள் தங்களுக்காக உயிர் விட்டவர்களை நினைத்து வருத்தம் அடைந்தனர். அவர்கள் இறந்த இடத்திலேயே அவர்களின் நினைவாக

கோயில் ஒன்றும் கட்டினர். சீலைக்காரியின் கருவறைக்கு அருகில் வைரவன் கருவறையும் கருப்பசாமி, முத்தையா, மீனாட்சி போன்றோரின் கருவறைகளும் அமைக்கப்பட்டது. தங்களுக்காக உயிர் நீத்த வைரவனை முதல் தெய்வமாக வணங்கிய பின்னரே தங்கள் குலதெய்வமாகிய சீலைக்காரியை வலையர் இன மக்கள் வணங்குகின்றனர்.

இன்றும் வலையர் இனக்குழு மக்கள் இக்கோயிலில் வழிபாடு நடத்துகின்றனர். கோயில் இருந்த இடத்தில் வாழ்ந்த இனக்குழு மக்கள் வளையப்பட்டி என்னும் ஊரில் இன்றளவும் வசித்து வருகின்றனர். வைரவநாதன் கோவிலின் கருவறையின் பின் பகுதியில் தமிழ் கல்வெட்டுப் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டுச் சான்று

பழங்காலத்தில் குறிப்புகளை கல்லில் எழுதும் பழக்கம் இருந்தது. அதனையே கல்வெட்டு என்று அழைத்தனர். தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல் சொல்லில் உள்ள செய்திகளும் இதற்குச் சான்றாக அமைகின்றன. தொல்காப்பியத்தில் போர்க்களத்திலே வீரமரணம் அடைந்தோருக்கு கல் எடுத்தாலும் வீர செயல்களை பொறித்த குறிப்புகள் காணப்படுகின்றன. இந்தக் கோவிலின் கருவறையின் பின்னே தமிழ் எழுத்து பொறிக்கப்பட்ட கல்வெட்டு காணப்படுகின்றது. இந்தக் கல்வெட்டு ஆங்கிலேயர்களின் ஆட்சியும் அவர்களின் கோவில் நிர்வாகம் பற்றியும் அவர்களுடன் போரிட்டு உயிரிழந்தவர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. வைரவநாதன் கோவிலின் வரலாற்றையும் அதன் தொன்மையையும் இக்கல்வெட்டின் வாயிலாக அறிய முடிகின்றது.

பலிபீடம்

எண்ணற்ற கோயில் வழிபாடுகளில் பலிபீடம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். எல்லா கோவில்களிலும் கொடி மரத்திற்கு அடுத்த நிலையில் பலிபீடம் அமைத்திருப்பர். இறைவனுக்கு நைவேத்தியமாக வைக்கப்படும் உணவு இந்த பலிபீடத்தில் சிறிதளவு வைக்கப்படுகின்றது. வைரவநாதன் கோயிலில் கொடிமரம் இல்லை. ஆனால் பலிபீடம் மட்டும் கருவறையின் முன்பு இடம்பெறுகின்றது. பல கோயில்களில் தாமரை மலர் மீது

மூன்றுஅடுக்கு பீடம் கொண்டதாய் ஒரு பலிபீடம் மட்டும் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இக்கோயிலிலோ இரண்டு பலிபீடம் இடம்பெறுகின்றது. ஒன்று வைரவநாதன் கருவறைக்கு முன்பாகவும் மற்றொன்று சீலைக்காரியின் கருவறைக்கு முன்பும் இடம்பெறுகின்றது.

கருப்பசாமி

வைரவநாதன் மற்றும் கருப்பசாமி இருவரும் உடன்பிறந்த சகோதரர்களாக இக்கோயில் அமைந்திருக்கும் ஊர் மக்கள் கருதுகின்றனர். வைரவனுக்கு அண்ணனாக இக்கருப்பசாமியைக் குறிப்பிடுகின்றனர். ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட சந்தையில் தன் தம்பிக்காக உயிர்நீத்தார். தம்பிக்குக் காவல்தெய்வமாக வைரவநாதன் கோயிலின் நுழைவுவாயிலில் இவரது உருவச்சிலை காணப்படுகின்றது. வைரவநாதனையும் கருப்பசாமியையும் யாதவர்குல மக்கள் குலதெய்வங்களாக வணங்குகின்றனர். திருவிழா நாட்களில் இக்கோயிலில் இரண்டு வகையான பொங்கல் வைக்கப்படுகின்றது. சர்க்கரை பொங்கல் வைரவனுக்கும் சர்க்கரையில்லாத பொங்கல் கருப்பசாமிக்கும் படையலாக வைக்கின்றனர்.

முத்தையா

முத்தையா தெய்வம் நாயக்கர் இன மக்களின் குலதெய்வமாக இருந்து வருகின்றது. ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்களின் நெருங்கிய உறவாகவும் அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து நண்பர்களாகவும் இருந்துள்ளனர். தங்கள் ஊர் மக்களை ஆங்கிலேயர்கள் கொடுமைப்படுத்துவதைக் கண்டு கோபப்பட்ட முத்தையா ஆங்கிலேயர்களை எதிர்த்து வைரவன் மற்றும் கருப்பசாமிக்கு ஆதரவாக சண்டையிட்டார். நாயக்கர் இன மக்கள் ஒன்றிணைந்து ஆங்கிலேயர்களின் செயலுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். ஆனால் ஆங்கிலேயர்கள் முத்தையாவைக் கைது செய்து கொடுமைகள் செய்தனர். முத்தையாவின் நலன் கருதி நாயக்கர் சமூகத்தினர் அமைதி காத்தனர். ஆங்கிலேயருக்கு அவர்கள் எதிர்த்து பேசியதும் மதிக்காததும்படிக்காமல் முத்தையாவின் மூக்கை அறுத்து எறிந்தனர். அவரை ஊர் மக்கள் கண் முன்னே நிற்க வைத்து அவமானப்படுத்தி அவர் மனதில்

பயத்தை உண்டாக்கினர். முத்தையா தாங்க முடியாமல் அவர்களிடம் சண்டையிட்டு இறுதியாக இறக்கிறார். முத்தையாவின் நினைவாக அங்கு வைரவர் நாதன் கோயில் முன்னே இடது பக்கம் முத்தையாவிற்கு தனியாக கோவில் அமைக்கப்பட்டது. இக்கோவில் நாயக்கருக்கு சொந்தமாக இருந்து வருகின்றது. நாயக்கர் இன மக்கள் முத்தையாவின் மூக்கை அறுத்ததைப் போல தங்கள் மூக்கையும் துண்டால் மூடிக்கொண்டு கோயிலின் கருவறைக்குள் பூஜை செய்யும்போதும் ஆண்கள் செல்கின்றனர். இன்று வரை முத்தையாவின் நினைவாக இம்முறையை கடைபிடித்து வருகின்றனர். முத்தையா இந்த கருவறையில் நின்ற நிலையில் காட்சி அளிக்கின்றார். அவரின் முகத்தில் மூக்கு இன்றி காணப்படுகின்றார்

பூஜை செய்யும் பூசாரியும் தலைப்பாக்கட்டி மூக்கை மறைத்து பூஜை செய்கின்றார். இனக்குழுத் தலைவனாக இருந்தவர் முத்தையா. இவர் ஊர்மக்களை பாதுகாத்தவர். அவரை மூக்கு இல்லாமல் பார்க்க விருப்பம் இல்லாமல் இவ்வாறு மூக்கை மறைத்துக் கொண்டு பூஜை செய்வதாக ஊர்மக்கள் கூறுகின்றனர்.

மீனாட்சி

மீனாட்சி தெய்வம் சீலைக்காரி அம்மனின் கருவறைக்கு முன்னே அமைந்திருக்கின்றது. மீனாட்சி பருவமடைந்த பெண்ணாக காட்சியளிக்கின்றாள். பருவம் அடைந்த ஒரு மாதத்திலேயே ஆங்கிலேயருக்கும் இனக்குழு மக்களுக்கும் இடையே சண்டை மற்றும் கலவரம் நடைபெறுகின்றது. இவள் யாதவர் குலத்தைச் சேர்ந்தவள். ஊரில் உள்ளே ஆங்கிலேயர்கள் தங்கள் கண்களுக்குத் தென்பட்டவர்களை எல்லாம் சிறை பிடித்தனர். அவர்களுக்கு அடங்கி செல்பவர்களை அடிமைப்படுத்தியும் எதிராக செயல்படுபவர்களை சிறையில் அடைத்தும் பயமுறுத்தினர். மீனாட்சி வைரவனின் இனக்குழுவைச் சார்ந்தவள் என்பதால் ஆங்கிலேயர்களின் கண்களில் தென்படாமல் இருக்க மறைவான இடத்தை தேடினாள். இறுதியாக சீலைக்காரி அம்மனின் கோவிலின் பின்புறம் அமர்ந்ததால் அவளுக்கு சீலைக்காரியின் குரல் கேட்டது. அவளை உள்ளே வா என்று அழைத்ததாகவும் அவள் பயந்து வெளியேவே இருக்க மீண்டும் மீண்டும் அதே குரல் கேட்டதாகவும் அங்குள்ள ஊர் மக்கள்

கூறுகின்றனர். பின் அவளே ஆங்கிலேயர்களுக்கு பயந்து உள்ளே இருந்த சீலைக்காரியின் கருவறைக்குள் அமர்ந்து விடுகின்றாள் சிலை கறி என் தங்கையாக இங்கே இருந்துவிடுவாயா என்று கேட்டதாகவும் அதற்கு அவள் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொண்டதாகவும் ஊர் மக்களின் வாய்மொழிக் கதை குறிப்பிடுகின்றது. ஆனால் சில மக்கள் மீனாட்சியை சீலைக்காரியின் கருவறைக்குள் கண்டதாகவும் அங்கேயே அவளைக் கொன்றதாகவும் அங்கிருந்த மக்கள் அவளுக்கு வழிபாடு செய்வதாகவும் கூறுகின்றனர். இக்கோயிலில் சீலைக்காரியும் மீனாட்சி எதிரெதிராக இருப்பது குறிப்பிடத்தக்கது.

வலையர் இனக்குழு மக்கள் குலதெய்வத்தை காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுத்த யாதவர் இனக்குழு தலைவனையும் நாயக்கர் இனக்குழு தலைவனையும் இங்கு குலதெய்வமாக வழிபடுகின்றனர். வைரவன் யாதவர் இனக்குழு மக்களுக்கும் முத்தையா நாயக்கர் இனக்குழு மக்களுக்கும் குலதெய்வமாக விளங்குகின்றனர். ஊரை விட்டு ஓடி ஒளிந்த வலையர் இனக்குழு மக்கள் விருதுநகர் மாவட்டம் வலையப்பட்டி என்னும் ஊரில் இன்றளவும் வசிப்பதாகக் கூறப்படுகின்றது. காலம் காலமாக இன்றளவும் தங்கள் குல தெய்வத்தை வழிபாடு செய்கின்றனர். ஆங்கிலேயர்களுக்கும் இனக்குழு மக்களுக்கும் இடையே சண்டை ஏற்பட்டு கோவிலை சேதப்படுத்திய தடங்கள் இன்றளவும் இக்கோயிலில் காணப்படுகின்றது. மேலும் பாதியாக உடைந்த சிலைகளும் தூண்களும் ஆங்காங்கே காணப்படுகின்றது.

வழிபாடு

மக்களின் சமய வழிபாட்டில் கோயில் முக்கியமான இடத்தை பெறுகின்றது. ‘ஆலயம் தொழுவது சாலவும் நன்று’ என்ற அவ்வையின் வாக்கிற்கு இணங்க மக்கள் இறைவன் வாழுகின்ற இடமாக கோவிலை கருதுகின்றனர். மக்கள் இறைவழிபாடு செய்வதனால் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் நீங்கி வாழ்க்கை மேம்படுவதாக நம்புகின்றனர். தமிழ்நாட்டில் சிறு தெய்வ கோயில்கள் மிகுதியாக காணப்படுகின்றன. வழிபாடு என்பது ஒரு வகை விருப்பத்தின் அடிப்படை வெளிப்பாடு ஆகும். மனிதன் தன் விரும்பும் இறைவனுக்கு

தனக்கு பிடித்தவாறு வழிபாடு செய்கின்றான். அவ்வடிப்படையில் வைரவநாதன் கோவில் குலதெய்வமாக வணங்கப்படுகின்றது.

கோவிலின் வழிபாடுகள்

இறை வழிபாடு காலம் காலமாக தோன்றி பல நிலைகளில் வளர்ச்சி பெற்று இருக்கின்றது. மன நிம்மதிக்காகவும் மனிதன் தன்னுடைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவும் வழிபாடு நடத்துகின்றான். பூஜைக்கு உரிய பொருட்களான தீபம், நீர், மலர், தூபம், சாந்தம் மாலை ஆடை அணிகலன்கள் ஆகும். வைரவநாதன் கோயிலின் வழிபாட்டு முறைகளிலும் மற்ற தெய்வ வழிபாட்டு முறைகளிலும் சிறு மாற்றங்கள் மட்டும் காணப்படுகின்றது.

வைரவன்

வைரவனுக்கு வடைமாலை சூட்டி தயிர்சாதம், வெண்பொங்கல் படைத்து வழிபடுகின்றனர். வைரவனுக்கு கோயில் எழுப்பி வணங்கத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து இன்று வரை இம்முறை நடைபெறுகின்றது. வடை மாலை சூட்டி வணங்கப்படுவதற்குக் காரணம் ஒன்றையும் இவ்வூர் மக்கள் கூறுகின்றனர். வலையர் இனக்குழு மக்கள் தங்களின் குலதெய்வத்தை காப்பாற்ற யாதவர்குல மக்கள் உயிர்விட்டனர். அவர்களுக்கு கோயில் எழுப்பி வழிபடும் பொழுது கணவனை இழந்த சிறு குழந்தையை கையில் ஏந்தி வடைகளை விற்பனை செய்யும் வளையர் இனக்குழு பெண் தன்னுடைய சார்பில் மாலை வாங்கி வழிபட பணம் இல்லாத காரணத்தால் தான் விற்பனைக்கு வைத்திருந்த வடைகளை மாலையாக செய்து இறைவனுக்கு சூட்டி வழிபட்டாள். அதனை இறைவன் ஏற்றுக் கொண்டதாக கூறி இன்று வரை அவளின் சார்பாக வடை மாலை சூட்டப்படுகின்றது. இவ்வாறு வழிபடுவதன் வாயிலாக சக்திகள் நெருங்காமல் இறைவன் நம்மை காப்பார் என்ற நம்பிக்கையை ஊர் மக்கள் கொண்டுள்ளனர்.

கருப்பசாமி

வைரவனின் சகோதரராக கருப்பசாமி விளங்குகின்றார். இவருக்கு கடா வெட்டி ஒன்பது நாட்கள் அன்னதானம் செய்து ஒவ்வொரு ஆண்டும் திருவிழா கொண்டாடப்படுகின்றது.

யாதவர் இனக் குழு மக்களும் வளையர் இன குழு மக்களும் சேர்ந்து இத்திருவிழாவை நடத்துகின்றனர். மாசி மாதம் நடைபெறும் கருப்பசாமி திருவிழாவில் வெண்பொங்கல் படைத்து பூமாலைகள் சூட்டி ஒவ்வொரு திருவிழாவின் பொழுதும் புதிய அருவாள் ஒன்றை காணிக்கையாக வைத்து பூஜைகள் செய்கின்றனர். இவர் செய்வதன் வாயிலாக ஊரின் எல்லையில் காவல் தெய்வமாக நின்று கருப்பசாமி தங்கையும் தங்கள் ஊரையும் காப்பார் என்று மக்கள் நம்புகின்றனர்.

முத்தையா

முத்தையா நாயக்கர் இன மக்களின் குலதெய்வமாக வழிபடப்படுகின்றார். இங்கு நாயக்கர் இனங்களும் மக்கள் வெண்பொங்கல் செய்து பூ மாலை சூட்டி துளசி இலைகளை தூய நீரிலும் பாலிலும் கலந்து இறைவனுக்கு அபிஷேகம் செய்து கோவில் முழுவதும் தெளித்து வழிபடுகின்றனர். அதன் தீர்த்தத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்று மக்கள் தங்கள் வீடு முழுவதும் தெளிக்கின்றனர். முத்தையா ஆங்கிலேயரின் கைகளால் மூக்கறுத்துக் கொலை செய்யப்பட்டார்டி என்பது ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. பூஜைகள் நடைபெறும் பொழுது ஆண்கள் தங்களது மூக்கையும் தலையையும் தலைப்பாகையால் கட்டிக்கொண்டு வழிபடுகின்றனர்.

மீனாட்சி

மீனாட்சி பருவமடைந்த பெண். முத்தையா வைரவனை வணங்கும் இனக்குழு மக்களும் வளையர் இனக்குழு மக்களும் கோவிலுக்கு செல்லும் பொழுது மீனாட்சிக்கு தாவணியும், வளையல், பாசி, தோடு, கொலுசு, குங்குமம் என அனைத்துப் பொருட்களையும் கொண்டு செல்கின்றனர். மல்லிகைப்பூ மாலையும் கொண்டு சென்று மீனாட்சிக்கு சூட்டி வழிபடுகின்றனர். மீனாட்சிக்கு என்று தனியாக பொங்கல் வைப்பது இல்லை. வைரவனுக்கு வைக்கப்படும் பொங்கல் படையலில் இருந்து மீனாட்சிக்கும் வைக்கப்படுகின்றது.

இங்கு மாசி மாதம் கருப்பசாமிக்கும் வைரவனுக்கும் மீனாட்சிக்கும் திருவிழா நடத்துகின்றனர். முத்தையா தெய்வம் நாயக்கர் இன குழு மக்களின் குலதெய்வம் என்பதால் பங்குனி

மாதங்களில் இவருக்கு சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றது. வலையர் இன குழு மக்களும் இப்பூஜைகளில் பங்கு பெறுகின்றனர்.

வலையர்இனமக்களின் குலதெய்வம் சீலைக்காரி ஆவார். மாசி மாதம் சிறப்பு பூஜைகளுடன் மஞ்சள் பட்டுப்புடவையுடன் பூமாலையும் சூட்டி குழந்தை பொம்மையை வைத்து வழிபடுகின்றனர். குழந்தை இல்லாதவர்களும் கர்ப்பிணிப் பெண்களும் நலமாக குழந்தைப்பேற்றை அடைவதற்கு பொம்மை வைத்து வழிபடும் வழக்கத்தை மேற்கொள்கின்றனர். இதற்கு ஊர் மக்கள் கூறும் காரணமாவது சீலைக்காரியின் கணவன் விவசாயம் செய்து வந்துள்ளார். விதைகள் தீர்ந்ததால் அருகாமையில் இருக்கும் ஊரில் சென்று நண்பர்களிடம் விதைகள் வாங்குவதற்காக காட்டுப்பாதை வழியாக செல்கிறார். அப்போது அங்கு வந்த யானை தாக்கி உயிரிழந்து விடுகிறார். இறந்த அவனது உடலைக் கொண்டு வந்து சீலைக்காரியிடம் ஒப்படைத்தனர். சீலைக்காரிக்கு தான் கருவுற்று இருப்பது தெரியாது. கணவன் இறந்து இரண்டு மூன்று வாரங்கள் கழித்து தான் கருவுற்றிருக்கும் செய்தியை அறிந்தாள். சில காலங்களில் வயிறு பெரிதாக மாறவும் மக்கள் அவளை தவறாக பேச தொடங்கினர். ஆனால் சீலைக்காரி அதனை பொருள்படுத்தாமல் தன் குழந்தைக்காக வாழ தொடங்கினாள். ஆனால் இம்மக்களின் பழிச்சொல் கேட்ட சீலைக்காரியின் மாமியார் அவளை சந்தேகப்பட்டாள். சீலைக்காரியின் கணவனுடன் பிறந்தவர்கள் 12 பேர் என்பதால் அவளது மாமியார் அவர்களின் எதிர்காலத்தை எண்ணி வருத்தம் அடைந்தாள். அவர்களை கரையேற்ற நினைத்து சீலைக்காரியை ஊர் மக்களின் முன்பு சந்தேகப்பட்டு அவளின் மேல் கோபப்பட்டாள். அதனை ஏற்றுக் கொள்ளாத சீலைக்காரி அனைவருக்கும் தெரியும்படி மறைந்ததாகவும் அவளின் சேலை மட்டும் மறைந்த இடத்தில் காணப்பட்டதாகவும் மக்கள் கூறுகின்றனர். அந்த இடத்தில் அவளுக்கு கோயில் கட்டி வழிபாடு செய்கின்றனர். அக்குழந்தையுடன் அவளும் உயிரை நீத்ததால் அவளுக்கு குழந்தை பொம்மை வைத்து வழிபாடு செய்து வருகின்றனர் வலையர்இனக்குழு மக்கள்.

முடிவுரை

- வைரவநாதன், கருப்பசாமி, முத்தையா, மீனாட்சி, சீலைக்காரி ஆகிய தெய்வங்களின் வரலாற்றை அறிய முடிகின்றது
- இந்த தெய்வங்களின் இனக்குழுவை பற்றிய தகவல்கள் தெரிய முடிந்தது
- சடங்கு முறை கொள்ளும் வழிபாட்டு முறைகளும் பற்றி இங்கு விரிவாக தெரிந்து கொள்ள முடிந்தது

அடிக்குறிப்பு

1. ந.மு.வேங்கடசாமி நாட்டார், கொன்றை வேந்தன் உலகநீதி மூதுரை மூலமும் உரையும், ப.2
2. நடராஜன்.எஸ், தமிழ் அகராதி, ப.70
3. ந.மு.வேங்கடசாமி நாட்டார், கொன்றை வேந்தன் உலகநீதி மூதுரை மூலமும் உரையும், ப.22
4. புலியூர்கேசிகன் (உ.ஆ), சிலப்பதிகாரம், கொலைக்களக்காதை, பா.145
5. புலியூர்கேசிகன் (உ.ஆ), சிலப்பதிகாரம், ஊர்காண்காதை, பா.6

துணைநூற்பட்டியல்

இராமநாதன்.ஆறு, நாட்டுப்புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை

இராஜமாணிக்கனார்.இரா, வழிபாடு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1982